People Studies
*Head Office*
"studying the people is for the people"

122 / 69, Vanniyar Street
Choolaimedu, Chennai 600 094
*Mobile:* 6379348523
*E-mail:* peoplestudies@gmail.com
*Website:* www.people-studies.in

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

# களஆய்வு முடிவுகளின் சாராம்சம்

*பேராசிரியர் டாக்டர் ச. ராஜநாயகம் வழிகாட்டுதலில், பண்பியல்-எண்ணியல் ஆய்வுமுறைகள் ஒருங்கிணைந்த தனித்துவ அணுகுமுறையைப் பின்பற்றி, மக்கள் ஆய்வகத்தில் முறையான பயிற்சி பெற்ற இரு ஆய்வு-நெறியாளர்களும் 45 களத் தகவல் சேகரிப்பாளர்களும் பெப்ரவரி 21 முதல் 23 முடிய ஈரோடு கிழக்கு தொகுதியில் நடத்திய களஆய்வு முடிவுகளின் சாராம்சம்:*

*எண்ணியல் தரவுகளுக்காக 1250 பேருடனும் பண்பியல் தகவல்களுக்காக 340 பேருடனும் (மொத்த ஸாம்பிள் ஸைஸ் 1590), 135 வாக்குச்சாவடிகளில் சந்திப்பு நிகழ்ந்துள்ளது.*

01. இறுதிக்கட்டப் பிரச்சாரம் மிகத் தீவிரமாக நடைபெற்றுவரும் சூழலில் வேட்பாளர்களுக்கு வெளிப்படும் ஆதரவு:

| | |
|---|---|
| 39.5 | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 24.5 | அனைத்து இந்திய அண்ணா திமுக |
| 9.5 | நாம் தமிழர் கட்சி |
| 2.0 | தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் |
| 1.5 | பிற கட்சிகள் + சுயேட்சைகள் |
| 2.0 | நோட்டா + வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை + |
| **21** | **சொல்ல விருப்பமில்லை + முடிவுசெய்யவில்லை** |

02. முதல்-வாக்காளர் உள்ளிட்ட 21 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளம் வாக்காளர்கள் (மொத்த ஸாம்பிளில் 12 விழுக்காடு) மத்தியில் நாம் தமிழர் கட்சிக்கும் காங்கிரஸூக்கும் இடையே முதலிடத்திற்குக் கடும் போட்டி நிலவுகிறது.

| | |
|---|---|
| நாம் தமிழர் கட்சி | 29.5 |
| இந்திய தேசிய காங்கிரஸ் | 28.5 |
| அஇஅதிமுக | 17.0 |
| தேமுதிக | 3.0 |

03. கல்வி, தொழில், சாதி, மதம், பாலினம் ஆகிய பிற அனைத்துக் காரணிகளைப் பொருத்தவரை காங்கிரஸ் வேட்பாளர் முதலிடத்திலும் அதிமுக, நாம் தமிழர் வேட்பாளர்கள் இரண்டாம் மூன்றாம் இடங்களிலும் நிற்கின்றனர்.

People Studies
*Head Office*
"studying the people is for the people"

122 / 69, Vanniyar Street
Choolaimedu, Chennai 600 094
*Mobile:* 6379348523
*E-mail:* peoplestudies@gmail.com
*Website:* www.people-studies.in

**04. மவுனம் காக்கும் வாக்காளர்களின் (21 விழுக்காடு) உள்ளக்கிடக்கை வாக்குப்பதிவில் வெளிப்படும் திசைக்கேற்ப வேட்பாளர்கள் எட்டும் சாத்தியமுள்ள உச்சங்கள்:**

| | இன்று வாக்கு | | சாத்தியமுள்ள உச்சம் |
|---|---|---|---|
| இந்திய தேசிய காங்கிரஸ் | *39.5* | ---------------> | 65.0 |
| அஇஅதிமுக | *24.5* | ---------------> | 41.0 |
| நாம் தமிழர் கட்சி | *9.5* | ---------------> | 17.0 |
| தேமுதிக | *2.0* | ---------------> | 4.0 |

♦ மவுனம் காக்கும் வாக்காளர்களின் பெரும்பான்மை ஆதரவு காங்கிரஸூக்குச் செல்லும் பட்சத்தில் மற்ற அனைத்துக் கட்சிகளும் வைப்புத்தொகை இழக்கும் நிலை வரலாம்.
♦ இவர்களின் பெரும்பான்மை ஆதரவு அதிமுக-வுக்குச் செல்லும் பட்சத்தில் காங்கிரஸ்-அதிமுக வாக்கு வேறுபாடு மிகக் குறுகலாம் எனினும் காங்கிரஸ் வெற்றிபெறுவது தவிர்க்க முடியாததாக அமையும்.

**05. ஒருவேளை, எடப்பாடி அணி, பன்னீர்செல்வம் அணி என அதிமுக பிளவுபட்டும், அமமுக-வும் தனித்தனிச் சின்னங்களில் நின்றிருந்தால் எப்படி ஆதரவு பிரிந்திருக்கலாம் என்ற விவரம்:**

| | | | |
|---|---|---|---|
| இந்திய தேசிய காங்கிரஸ் | 43.5 | பழனிச்சாமி அதிமுக | 15.5 |
| நாம் தமிழர் கட்சி | 19.5 | அமமுக | 7.0 |
| தேமுதிக | 4.0 | பன்னீர்செல்வம் அதிமுக | 5.0 |

**06. களத்தில் கண்டவை:**
♦ பிரச்சாரம் என்ற பெயரில் முன்னாள்-இந்நாள் அமைச்சர்கள், கட்சிப் பொறுப்பாளர்கள், தொண்டர்கள் எனத் தொகுதிக்கு வெளியிலிருந்து படையெடுத்துள்ளோரால் தொகுதியே மூச்சுத் திணறுகிறது.
♦ சில தினங்கள் முன்பு வரை கூவத்தூர் கூடாரங்களாய் இருந்த உல்லாசபுரிகள் இப்போது பெரும்பாலும் வெறிச்சோடி உள்ளன.
♦ திமுக, அதிமுக நிர்வாகிகளிடையே பாதுகாப்பாகப் பணப்பட்டுவாடா செய்யவேண்டுமே என்ற படபடப்பு வெளிப்படுகிறது. திமுக-வினரிடையே தேர்தல் ரத்தாகி விடுமோ என்ற பதட்டமும் தூக்கலாக வெளிப்படுகிறது.
♦ சாதி, மதம் உள்ளிட்ட அனைத்துக் காரணிகளையும் உள்வாங்கி இயக்கும் மைய-அச்சுக் காரணியாகப் பணம் திகழ்கிறது. அதாவது, வெற்றிக்குப் பணம் மட்டுமே போதாது - ஆனால் பணமின்றி எக் காரணியும் வேலைசெய்யாது.
♦ வாக்குக்குப் பணம் வாங்குவது குறித்து 90 விழுக்காடு வாக்காளர்களிடையே பரபரப்பும் மகிழ்ச்சியும் விளங்குகிறது.
♦ மிரட்டும் துப்பாக்கிகள் மிலிட்டரி யூனி஡பார்ம்கள் சகிதம் வேறொரு உலகத்தில் கடமையாற்றுகிறது தேர்தல் ஆணையம்.

சென்னை பத்திரிக்கையாளர் சங்கம்
24 பெப்ருவரி 2023

சிறுமலர் ஜெகன்
துணை இயக்குநர், மக்கள் ஆய்வு
*Mobile:* 9944866223